**PROCEEDING OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY SEIAA-TN FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. V.NAGARAJAN ROUGH STONE AND GRAVEL QUARRY SURVEY NUMBERS : 34/1B1, 35/2B, 35/3 AND 35/4 OVER AN EXTENT OF 4.75.00 HECTARES, NALMUKKAL VILLAGE, MARAKKANAM TALUK, VILLUPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of Rough stone and Gravel quarry with in an Extent of 4.75.00 Hectares by the unit M/s. V.Nagarajan Rough stone and Gravel Quarry Survey Numbers: 34/1B1, 35/2B, 35/3 and 35/4, Nalmukkal Village, Marakkanam Taluk, Villupuram District

**Venue:** M/s. A.M.S.Mahal, No.201/1, Main Road, Murukeri Village, Siruvari post, Marakkanam Taluk, Villupuram District

**Date & Time:** 11.12.2024 – 11.00 P.M.

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Dr. C.Palani, I.A.S., | District Collector, Villupuram. |
| 2. | Er.V.Purusothaman,B.Tech., M.E., | District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram. |
| 3. | Thiru.M.Sadagopan | Typist, Tamilnadu Pollution Control Board, Villupuram. |
| 4. | Thiru.M.Prabu | M/s.Global Mining Solutions, Omalur,Salem-636455 |
| 5. | Tmt.K.Abirami | Functional Area Expert, M/s.Global Mining Solutions, Omalur,Salem-636455. |

| | | |
|---|---|---|
| 6. | Thiru.V. Venkatesh | Geologist |
| 7. | Thiru.V.Nagarajan | Project Proponent<br>M/s. V.Nagarajan Rough stone and Gravel Quarry |
| 8. | Public and Environmentalists | 25 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the District Collector, Villupuram, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s. V.Nagarajan Rough stone and Gravel Quarry Survey Numbers : 34/1B1, 35/2B, 35/3 and 35/4 Over an Extent of 4.75.00 Hectares, Nalmukkal Village, Marakkanam Taluk, Villupuram District has proposed to Mining project of Rough stone and Gravel quarry. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 16.07.2024. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on 11.12.2024, was published in *"Times of India"* and *"Dailythanthi"* on 05.11.2024 with the approval of the District Collector, Villupuram. This public hearing is for the proposed industry of M/s. V. Nagarajan Rough Stone and Gravel Quarry, and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA consultant. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and

suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The District Collector requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Mr. V. Nagarajan, Proprietor of the M/s. V. Nagarajan Rough Stone and Gravel Quarry Explained about the project and he welcomed the District Collector, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The District Collector of Villupuram has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

1. **Mrs. Thennamal,Nalmukkal Village:**

- She stated that the operation of the quarry, should be operated in a manner that does not impact the environment.
- She also said that the proposed scheme will provide employment opportunities.
- She conveyed her endorsement for this upcoming project.

2. **Mr. Gopalakrishnan ,Nallalam Village:**

- He expressed his interest in pursuing a career as a driver, stated that this upcoming project will provide him with job opportunities.
- Also, he stated that he supports the project as his family's livelihood will increase with the proposed project.

3. **Mr. Suresh kumar ,Nalmukkal Village**:

- He stated that, there are large number of young people in their town, this upcoming project will provide them with employment opportunities.

- And also he said, the project proponent should ensure that the project is carried out with no adverse effects on the environment.
- He expressed his support for this project.

4. **Mr. Prabu , Keezharungunam Village**:

- He stated that he owns lorries and that the proposed project will facilitate their operation, which he believes will be highly advantageous for him.
- He conveyed his endorsement for this project.

5.**Mr. Murugan, Perumukkal village** :

- He stated that he owns a M Sand unit and he said that the upcoming project is essential in the present circumstances, as the materials produced by the quarry activities will serve as the raw material for the M Sand Unit.
- He expressed his support for this project.

The following Five members of the public have expressed their opinion in writing are as:

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Mr.Narayanasamy, Nalmukkal village | He conveyed his endorsement of the proposed initiative, stating that young individuals like himself would have access to local employment opportunities |
| 2. | Mr.Prabakaran Moorthy, Nalmukkal Village | He expressed his support for the proposed initiative, indicating that young people like himself would gain access to local job opportunities. |
| 3. | Mr.G.A.Ezhumalai, Pudhukalani, Brammadesam post | He conveyed his endorsement of the proposed initiative, highlighting that the young people in their community will benefit from the presence of local job opportunities. |
| 4. | Mrs.Kalamoorthy,Nalmukkal Village | He expressed his support for the proposed Project and said that his son, who is a JCB operator, will get employment. |

| | | |
|---|---|---|
| 5. | Mr.Sunil Raj,<br>Pudhukalani,Brammadesam | He expressed his support for the proposed project and said that he welcomed the project as he would get the necessary materials like gravel through this quarry |

**Thereafter no views/comments were raised.**

**The District Environmental Engineer, TNPCB, Villupuram.**

Finally the DEE, TNPCB, Villupuram summarized views, suggestion and responses of the public about the Project and also informed that the said views, suggestion and responses of the public are recorded through video-graphy and the same will be sent to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu along with the written representation received from the Public.

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, MarakkanamTaluk office, Block Development Office, Marakkanam, Nalmukkal Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Vilupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

12/12/24

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Villupuram.

12/12

District Collector,
Villupuram.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 05.11.2024 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 03 & 25 Persons).
3. Audio & Video stored in the Pendrive of the public hearing proceedings.

4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 5 Nos.

**விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், நல்முக்கல் கிராமம், சர்வே எண்கள். 34/1B1, 35/2B, 35/3 மற்றும் 35/4ல் 4.75.00 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் V. நாகராஜன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் புருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 11.12.2024 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்:** | விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், நல்முக்கல் கிராமம், சர்வே எண்கள். 34/1B1, 35/2B, 35/3 மற்றும் 35/4ல் 4.75.00 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் V. நாகராஜன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவப்படவுள்ளது. |
| **இடம்:** | தி/ள். ஏ.எம்.எஸ் மஹால், க.ச.எண். 201/1, மெயின் ரோடு, முருக்கேரி கிராமம், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் . |
| **நாள் மற்றும் நேரம் :** | 11/12/2024 - காலை 11.00 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | Dr. C. பழனி இ.ஆ.ப., | மாவட்ட ஆட்சியர்,<br>விழுப்புரம். |
| 2. | Er.V. புருஷோதமன் B.Tech.,M.E., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 3. | திரு. ம. சடகோபன் | தட்டச்சர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 4. | திரு. M. பிரபு | தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர் , சேலம் - 636455. |

| | | |
|---|---|---|
| 5. | கே. அபிராமி | செயல்பாட்டு பகுதி நிபுணர்,<br>(Functional Area Expert)<br>தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர் , சேலம் – 636455. |
| 6. | திரு. வே. வெங்கடேஷ் | புவியியலாளர் |
| 7. | திரு. V.நாகராஜன் | திட்ட உரிமையாளர்,<br>தி/ள் V. நாகராஜன் சாதாரண கல் மற்றும் கிரேவல் குவாரி, நல்முக்கல் கிராமம். |
| 7. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (25 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழ்ல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், நல்முக்கல் கிராமம், தி/ள் V. நாகராஜன் சாதாரண கல் மற்றும் கிரேவல் குவாரி, சர்வே. எண் 34/1B1, 35/2B, 35/3 மற்றும் 35/4ல் 4.75.00 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 16.07.2024 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம்

கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள் V. நாகராஜன் சாதாரண கல் மற்றும் கிரேவல் குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், முருக்கேரி கிராமம் தி/ள். ஏ. எம். எஸ் மஹாலில் 11.12.2024 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 05.11.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுல்ல மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள் V. நாகராஜன் சாதாரண கல் மற்றும் கிரேவல் குவாரி நிறுவனத்தின் செயல்பாட்டு பகுதி நிபுணர் (Functional Area Expert), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திருமதி. கே. அபிராமி, செயல்பாட்டு பகுதி நிபுணர் (Functional Area Expert), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும்,

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம், அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1, திருமதி. தேனம்மாள், நல்முக்கல் கிராமம்**

- இவர் கூறுகையில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு குவாரியின் இயக்கமானது இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.
- உத்தேசிக்கப்பட்ட இத்திட்டத்தால் வேலை வாய்ப்பு கிடைக்கு என்றும் கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**2. திரு.கோபாலகிருஷ்ணன், நல்லாளம் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் ஒரு ஓட்டுநர் ஆக பணி புரிந்து வருவதாகவும், இத்திட்டத்தால் எனக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.
- மேலும், உத்தேசிக்கப்பட்ட இத்திட்டத்தால் தன் குடும்பத்தின் வாழ்வாதாரம் பெருகும் என்பதனால் திட்டத்தை ஆதரிப்பதாக குறிப்பிட்டார்.

**3. திரு. சுரேஷ் குமார், நல்முக்கல் கிராமம்,**

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் இளைஞர்கள் அதிகம் உள்ளதால், வேலைவாய்ப்பு அவர்களுக்கு இத்திட்டத்தால் கிடைக்கும் என்று குறிப்பிட்டார்.

- மேலும், திட்டத்தின் உரிமையாளர், சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி செயல்பட்டால் மிகவும் நல்லது என்று கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு அவர் தனது ஆதரவை தெரிவித்தார்.

**4. திரு. பிரபு, கீழ்அருங்குணம் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் ஒரு லாரி உரிமையாளர் என்றும், முன்மொழியப்பட்ட இத்திட்டத்தால் தன்னுடைய லாரிகள் செயல்படும் என்றும், தனக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**5 திரு. முருகன், பெருமுக்கல் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் ஒரு M Sand யூனிட் உரிமையாளர் என்று கூறினார்.
- குவாரியில் செயல்பாடுகளால் உருவாகும் பொருட்கள் (Materials) எம் சாண்ட் யூனிடிற்கு மூலபொருளாக அமையும் என்பதனால், தற்போது உள்ள சூழ்நிலையில் முன்மொழியப்பட்ட இத்திட்டமானது தனக்கு அவசியம் தேவை என்று கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**கீழ்க்கண்ட ஐந்து பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. நாராயணசாமி, நல்முக்கல் கிராமம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், தன்னை போன்ற இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். |

| | | |
|---|---|---|
| 2. | திரு. பிரபாகரன் மூர்த்தி, மேட்டு காலணி, நல்முக்கல் கிராமம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், தன்னை போன்ற இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். |
| 3. | திரு. G.A. ஏழுமலை, புதுக்காலனி, பிரம்மதேசம் அஞ்சல் | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், எங்கள் ஊரில் உள்ள இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். |
| 4. | திருமதி. கலா மூர்த்தி, நல்முக்கல் கிராமம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், JCB ஆப்பரேட்டர் ஆக உள்ள தன்னுடைய மகனுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். |
| 5. | திரு. E. சுனில்ராஜ், புதுக்காலனி, பிரம்மதேசம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், தனக்கு தேவையான ஜல்லி போன்ற பொருட்கள் இந்த கல் குவாரியின் மூலம் கிடைப்பதனால் திட்டத்தை வரவேற்பதாக கூறினார். |

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை கூறினார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தர். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், மரக்காணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மரக்காணம் தாலுகா அலுவலகம், நல்முக்கல் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் -தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

தி. புருஷோத்தமன்
2/12/24

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 05.11.2024).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (3 பக்கங்கள் 25 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 5 மனுக்கள்.